★ நீண்ட கால இடைவெளிக்குப்பின் யாழ்நகரில் இன்று

# 3 மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும்

மேதினத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் இன்று நடைபெறவுள்ள மூன்று மாபெரும் ஊர்வலங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழமையைவிட மிகவும் சிறப்பான முறையில் இம்முறை மேதினக் கொண்டாட்டங்களை மேற்கொள்வதற்காக இவர்கள் திட்டமிட்ட முறையில் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றார்கள். தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அந்தஸ்தையும், அங்கீகாரத்தையும் பெறுவதற்கான மக்கள் ஆதரவை எடுத்துக்காட்டும் விதத்தில் இவ் ஊர்வலங்கள் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மேதின ஊர்வலம் உரும்பிராய் சிவகுமாரன் சிலையருகே இருந்து காலை ஒன்பதுமணியளவில் ஆரம்பமாகும். பலாலிவீதியூடாக நல்லூரை ஊர்வலம் வந்தடைய அங்கு மாபெரும் பொதுக்கூட்டமொன்றும் இடம்பெறும். இக்கூட்டத்தில் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் உரையாற்றவுள்ளார்கள். ஈழவர் முன்னணி நடாத்தும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இணுவில் சந்தியிலிருந்து காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமாகி சுன்னாகம் சந்தைமைதானத்தில் முடிவடையும். இங்கு இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் ஈரோஸ் பிரமுகர்கள் உரையாற்றுவார்கள். அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்தும் ஐக்கிய மேதின [ 6ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் ஊர்வலம்

புலிகளின் மேதின ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு உரும்பிராய் சந்தியிலிருந்து ஆரம்பமாகும்.

விலை ரூபா 1·25

REGISTERED AS A NEWSPAPER

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

ஒலி 153 வெள்ளி 01·05·1987 (சித்திரை 18) ஈர்மான் 02

Nallur Branch Library

பிரபாகரனின் மேதினச் செய்தி

# சுதந்திர தமிழீழ தனி அரசே

# எமது பிரச்சினைக்கு இறுதிதீர்வு

## ஜே. ஆரின் பொறிக்குள் புலிகளை வீழ்த்தமுடியாது!

(தமிழீழம்)

"சமாதானப் பேச்சு என்ற பொறிக்கிடங்கில் புலிகளை... அடக்கி எம்மை நிராயுதபாணிகளாக்கி நிர்மூலம் ...வதே ஜெயவர்த்தனாவின் சதித்திட்டம். இந்தச் சதி ...லைக்குள் புலிகளை வீழ்த்திவிட முடியாது. சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இதனை அடைய எமது உயிர், உடல், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்துப் போராடுவோம்" என்று புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இன்றைய மேதினத்தையொட்டி விடுத்துள்ள விசேட செய்தியில் தெரிவித்துள்ளார். இச்செய்தியின் முழு விபரமும் வருமாறு:-

...னது அன்பிற்கும், மதிப்...கும் உரிய தமிழீழ மக்களே! ...தினம் ஓர் மகத்தான நாள். ...து விடுதலைப்பாதையில் ...திருப்பு முனையான நாள். ...து சுதந்திர வரலாற்றில் ஓர் முக்கியம் வாய்ந்த நாள். தொழிலாளர்கள் திருநாளாகிய இம்மேதினத்தில், உலக உழைப்பாளிகளின் உன்னதமான இத்தினத்தில் நாம் ஓர் மாபெரும் பேரணியை நடத்தி




எமது ஒன்று திரண்ட சக்தியை, எமது வீறுகொண்ட விடு [ 6ஆம் பக்கம் பார்க்க ]

## ஒரு குடும்பத்தையே ஷெல் பதம் பார்த்தது; சிறுமி பலி

நாவற்குழி ராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் நான்கு வயதுச் சிறுமி ஒருவர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிய நிலையில் துடிதுடித்து மரணமானார். இச்சிறுமியின் தாய், தந்தை, சகோதரி ஆகிய மூவரும் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இரவு சுமார் பதினொரு மணியளவிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றது. நாவற்குழி முகாம் 'ஷெல்' கோப்பாய் சந்தியின் தெற்குப் பக்கமாகவுள்ள தோல்பிட்டி என்ற [ 6ஆம் பக்கம் பார்க்க ]



கோப்பாயில் நேற்று முன்தினம் இரவு நாவற்குழி முகாம் இராணுவத்தினர் நடத்திய மூர்க்கத்தனமான ஷெல் தாக்குதலால் மரணமான தம்பிராசா தர்ஷிகா என்ற நான்கு வயதுச் சிறுமியின் சடலம் குடல் சிதறி, தலை பிளந்து கிடப்பதைக் காணலாம். (படம்: வி. ஆனந்த்)

அமைச்சர் அத்துலத் முதலி அறிவிப்பு:

## விமான தாக்குதல் நிரந்தரமாக நிறுத்தப்படவில்லை

...குடாநாட்டின்மீதான ...னத்தாக்குதல்கள் நிறுத்...வில்லை எனவும், தேவை...ம்போது விமானத் தாக்...கள் தொடர்ந்து மேற்...ளப்படும்எனவும் தேசிய ...பஸ்துஅமைச்சர் லலித் ...த் முதலி நேற்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். விமானத் தாக்குதல்கள் வடக்கில் ஒருசில தினங்களுக்கு நிறுத்தப்பட்டிருந்ததே தவிர, அது முற்றாக நிறுத்தப்படவில்லை. இங்கு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. அதற்கான சாத்தியக்கூறுகளும் மிகக் குறைவாகவே உள்ளன எனத் தெரிவித்த அமைச்சர், இந்நிலையில் ராணுவத் தாக்குதல்களை எப்படி நிறுத்தமுடியும் எனவும் கேள்விக்கணை தொடுத்தார்.

அரசு அரசியல்ரீதியில் பிரச் [ 6ஆம் பக்கம் பார்க்க ]

## பேச்சுக்கு நிர்ப்பந்திக்க இராணுவத் தாக்குதல்

...மிழ்த் தீவிரவாதிகளை ...பிரச்சினைத்தீர்வு பேச்சு...ர்த்தைகளில் பங்குபற்று...ம் நிர்ப்பந்திக்கும் முக...வ தற்பொழுது தமிழ்ப் ...களில் இராணுவத்தாக்...கள் ஆரம்பிக்கப்பட்டுள் ...ன பிரதி வெளிவிவகார ...ச்சர் டிரோன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

யப்பான் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'தற்போது தென்பகுதியை நோக்கி தீவிரவாதிகள் தமது தாக்குதல்களை ஆரம்பித்துள் [ 6ஆம் பக்கம் பார்க்க ]

## அக்கரைப்பற்று தாக்குதல்

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. ஏற்பட்ட உயிர்ச்சேத விபரங்கள் பற்றி எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

## பிரபாவின் முதற் காட்சி

தமிழ் நாட்டிலிருந்து வெளியேறி கடந்த பல மாதங்களாக தமிழீழத்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று முதற்தடவையாக பகிரங்கமாகக் காட்சியளித்தார்.

நேற்றிரவு எட்டரை மணிக்கு நிதர்சனம் ஒளிபரப்பின் மூலம் மேதினச் செய்தியை பிரபாகரன் வழங்கிய போது பலரும் இவரை முதற் தடவையாகப் பார்க்க முடிந்தது.

## ஆஸ்பத்திரி மீண்டும் சேதம்

கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் யாழ். வைத் [ 6ஆம் பக்கம் பார்க்க]

ஆதரவாளர்களுக்கும் அன்பர்களுக்கும்

# எமது தொழிலாளர் தின வாழ்த்துக்கள்

## • CANADA • GERMANY • FRANCE • NORWAY

நோர்வே செல்வதற்கு துரித கதியில் பிரயாண ஒழுங்குகளை
ஏற்படுத்திக் கொடுப்பவர்கள்

அத்துடன்

**கப்பலில் வேலை செய்வதற்கு**

A. B. (Sailor), Oiler, Deck Boy, Mess Boy

ஆகிய வெற்றிடங்களுக்குச் செல்ல விரும்புபவர்கள்
உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

மற்றும் பாஸ்போட், பொண்ட் (Bond) விசா, ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

★ ★

## GLORIA TRAVELS

# குளோரியா ரவல்ஸ்

சின்னத்தம்பி அவெனியூ - மானிப்பாய்

குறிப்பு : எமக்கு வேறு கிளைகள் கிடையாது

05008

நல்வாக்கு

ஒரு காரியத்தில் அளவு கடந்த முயற்சி எடுத்துக் கொண்டாலும் அது முடிகிற காலத்திலேயே முடியும்

— ஔவையார்.

சூ. ஜீ. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## தமிழர் ஒற்றுமைநாளாக மே தினம் மிளிரட்டும்

உலகம் பூராவும் சுரண்டப்பட்டு வாழும் பட்டாளி மக்களின் விடுதலைத் திருநாளான மே தினம், சகல இன, மத, மொழியைச் சேர்ந்த மக்களாலும் இன்று கொண்டாடப்படுகின்றது.

நூற்றியொரு ஆண்டுகளுக்கு முன்னர் சிக்காகோ நகரில் பிரகடனம் செய்யப்பட்ட இந்தத் தொழிலாளர் தினம், இன்று உலகம் முழுவதும் தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திரப் பிரகடன நாளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

எட்டு மணித்தியால வேலை, உழைப்புக் கேற்ற ஊதியம், வேலைத்தலப்பாதுகாப்பு, தொழிலுக்குப்பாதுகாப்பு, போன்ற இன்னோரன்ன அம்சங்களைக் கொண்ட தொழிலாளர் நலன் பாதுகாக்கும் சட்டங்களால் மேதினம் வரலாற்றுப் பெருமை பெற்றுள்ளது.

மே தினம் தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்ற போதிலும், பல நாடுகளில் தொழிலாளர்கள் இன்னமும் அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்ற உண்மையை மறைக்க முடியாது

சில அரசாங்கங்கள் மே தினத்தின் தாற்பரியத்தையே அழித்தொழித்து, இத்தினத்தைத் தங்களின் பிரசார மேடையாக, அல்லது தமது பலத்தைக் காட்ட ஆட்சேர்க்கும் அரங்கமாக மாற்றியமைத்துள்ளன.

வர்க்கரீதியான போராட்டத்தினால் சில இடங்களில் மே தினம் வெறும் விடுமுறை தினமாகக் கருதப்பட்டுள்ளதே தவிர, தொழிலாளர் தினமாகக் கொள்ளப்படவில்லை.

ஒரு நாட்டுக்குள்ளேயே இவ்வாறான வித்தியாசங்களும், பாகுபாடுகளும் காணப்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்க முடியும்.

ஸ்ரீலங்கா இதற்கொரு நல்ல உதாரணமாகும்.

ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக்கட்சி, மே தினத்தை ஒரு கலைவிழாவாகவே கொண்டாடி வந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பாடகர்களும், நடிகர்களும், உள்ளூர் சினிமாக்காரர்களும் இவர்களின் மே தினக் கலை விழாவுக்கு ஆட்கள் சேர்ப்பவர்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளனர்.

அதே வேளையில் தென்னிலங்கையின் மற்றைய எதிர்க்கட்சிகளும், இடதுசாரிகளும் அரசாங்கத்துக்கு எதிரான தங்கள் சக்தியை மக்கள் முன் எடுத்துக் காட்டுவதற்காக, பல்லாயிரக்கணக்கான மக்களைச் சேர்த்து ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்திவந்துள்ளனர்

இந்த இரண்டு வகையான மேதின விழாக்களாலும் தொழிலாளர் வர்க்கம் எந்தளவுக்கு நன்மை பெறக்கூடியதாகவிருந்தது என்றால், அங்கு ''பூஜ்யம்'' தான் பதிலாகக் கிடைக்கும்.

அதே வேளையில் தமிழீழத்தின் நிலைப்பாடு வித்தியசாமாக இருந்தது.

தமிழர் என்று கூறப்படும் முழு இனமுமே அடக்கி ஒடுக்கப்பட்டு, படுகொலை செய்யபபட்டு, சித்திரைவதைக்குள்ளாக்கப்பட்டு வந்ததால் தொழிலாளர் என்ற வர்க்கத்தினர் மே தினத்தைக் கொண்டாட முடியாத நிலையே தமிழீழத்தில் கடந்த சில ஆண்டுகளாக இருந்து வருகின்றது.

முழு இனமுமே சுதந்திரத்துக்காக உயிர்ப் பலியாகிக் கொண்டிருக்கையில், ஒரு சிறு தொழிலாளர் கூட்டம் எவ்வாறு விடுதலைவிழா கொண்டாட முடியும்?

ஆனால் இன்றைய மே தினத்தில் ஒரு வித்தியாசத்தை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

இந்நாட்டை சர்வாதிகாரமாக ஆளுபவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் மே தினத்தைக் கொண்டாடமுடியாதவர்களாக்கப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டைக் குண்டுவெடிப்பைச் சாதகமாக்கித் தலைநகரில் மட்டுமன்றி, தென்னிலங்கை முழுவதுமே மே தினம் தடைசெய்யப்பட்ட தினமாக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் புத்துணர்ச்சியுடன் இன்று மே தினம் கொண்டாடப்படுகின்றது.

பல வருடங்களுக்குப் பின்னர், பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்கும் மே தினமாக இன்றைய தினம் இங்கே கொண்டாடப்படுகின்றது.

தலைவர் பிரபாகரன் தமது மேதினச் செய்தியில் கூறியிருப்பது போல, ''தமிழீழம் தூரத்தில் இல்லை'' என்ற மகிழ்ச்சியுடன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியாவும், உலகெங்குமுள்ள சோஷலிஸ நாடுகளும் அங்கீகரிக்க வேண்டுமென மக்கள் கோருவது தமிழரின் மே தின கோரிக்கையாக அமையவேண்டும்.

★ மே தினத்துக்கு இன்று 101 வயது

# அடக்குமுறை அதிகாரத்தை தொழிலாளர் வென்ற நாள்

வருடா வருடம் மே மாதம் முதலாம் திகதி 'மேதினம்' உலகம் பூராவும் கொண்டாடப்பட்டோ அல்லது வீர நினைவு நாளாகவோ அன்றி எதிர்கால விடிவை நோக்கிய நாளாகவோ நினைவுகூரப்பட்டு வருகின்றது.

உலகெங்குமுள்ள தொழிலாளர்களை ஒன்று படவைத்து ஒரே குரலில் தமது இலட்சியத்திற்காக சுரண்டும் வர்க்கத்திற்கெதிராக சுரண்டப்படும் வர்க்கம் போர்க்கொடி தூக்கப்போவதை வெளிக்காட்டும் முன்னெச்சரிக்கை நாளாகவும் அதே சமயம் கடந்த காலத்தில் தான் ஆற்றிய வீரப் போராட்டங்களை நினைவு கூரும் நாளாகவும் இது அமைகின்றது.

வட அமெரிக்காவில் வியாபித்த கைத்தொழில் வளர்ச்சி மிகு நகரங்களில் ஒன்றாக சிக்காக்கோ விளங்குகிறது இந்தச் சிக்காக்கோ நகரம்தான் போராட்ட குவிமையமாக இருந்தது.

அக் காலத்தில் ஒரு நாளைக்கு பதினெட்டு மணித்தியாலங்கள் வேலை வழமையாக இருந்தது தொழிலாளர்கள் இறக்கும்வரை வேலை வாங்கப்பட்டார்கள். அவர்களது வாழ்வு வேலை, குறுகிய நேர ஓய்வு, பட்டினி ஆகியவற்றால் தடை போட்டுக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

நீண்ட காலக் கனவுகள் எதிர்பார்ப்புக்களை நோக்கி வர்க்கம் என்ற வகையில்

**வி. என். எஸ். உதயசந்திரன்**

தொழிலாளர்கள் கிளர்ந்தெழு முன்னர் சிந்திப்பதற்கும் சுய கல்விக்கும் அவர்களுக்கு ஓய்வு நேரம் அவசியமாகியது.

வேலை நிறுத்தம் செய்வது என்பது சமுதாயத்தில் உள்ள சகல அதிகார சக்திகட்கும் எதிரான போரில் நுழைவது போல அக்காலத்தில் கருதப்பட்டது.

1884 ஆம் ஆண்டு பல தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு சிக்காக்கோ நகரில் அக்டோபர் மாதம் ஏழாம் திகதி ஒரு மாநாடு நடத்தப்பட்டது. அம் மாநாட்டில் ''1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி எட்டு மணிநேர வேலைக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்'' எனத் தீர்மானிக்கப்பட்டது.

1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர்கள் எட்டு மணித்தியால வேலை நாளை தமதாக்கிக் கொள்ள வேண்டும் இதற்கு உடன்படாத எந்தவொரு தொழிற்சாலையினதும் வாசற் கதவுகளை தொழிலாளர்கள் மூடிவிட வேண்டும் என அவர்கள் பிரேரித்த இத் திட்டத்திற்கு பேராதரவு கிட்டியது.

தொழிலாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகம்பிறந்திருந்தது. அவர்கள் வேலை நிறுத்தத்திற்கு தம்மைத் தயார்படுத்திக் கொண்டனர்.

சில பிற்போக்குச் சக்திகள் இக் கூட்டமைப்பை உடைக்க முயன்றும் அது சாத்தியப்படவில்லை. தொழிலாளர்களிடையே ஒரு தனி வேகம் தென்பட்டது.

1885 ஆம் ஆண்டு சிக்காக்கோ மத்தியதொழிலாளர் யூனியன் நிறைவேற்றிய தீர்மானம் பெரும் செல்வாக்கைப் பெற்றது. ''வன்முறை, இது மாத்திரமே ஆக்க பூர்வமான வாதமாக, சுரண்டலாளர்கட்கு எதிராக முன்வைப்பதற்கு ஏதுவாக கூலித்தொழிலாள வர்க்கம் தன்னை ஆயுதபாணியாக்க வேண்டும் என நாம் அவசரமாக அழைப்புவிடுக்கின்றோம்'' இவ்வாறு அத்தீர்மானம் கூறியது,

இவையெல்லாம் தெளிவான அழைப்புகளாக இருக்கவில்லை. சிக்காக்கோ தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் ஆயுதந்தாங்கிய படைப்பிரிவுகளை அமைப்பதில் ஈடுபட்டனர். தொழில் கொள்வோரின் தனிப்பட்ட இராணுவத்தின் வன்முறைகட்கு அதே விதத்தில் பதிலளிப்பதற்காகவே இத்தொழிலாளர் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவை ஆய்வு- எதிர்ப்புப் போராட்ட சங்கங்கள் என அழைக்கப்பட்டன

இந்த தொழிலாளர் படைகளை பூர்ஷுவா வர்க்கம் தடைசெய்தது. இதனைத்தொடர்ந்து இவை தலை மறைவாக இயங்கின.

அந்த முக்கியத்துவம் வாய்ந்த தினம் அணுகிக்கொண்டிருக்கையில் சிக்காக்கோவின் வீதிகளினூடாக ஊர்வலங்கள் வாரந்தோறும்இடம்பெற்றன.

இப்போராட்டத்தை உடைக்க முதலாளித்துவ அரசுபெரு முயற்சி செய்தது. தகவல் சாதனங்கள் முடுக்கிவிடப்பட்டன. தொழிலாளர் தலைவர்களை அழிப்பதன் மூலம் போராட்டதை உடைக்கலாம் என நினைத்து அம்முயற்சியிலும் ஈடுபட்டது.

இருவர்க்கத்தாரும் நீண்ட எதிர்பார்ப்புடன் எதிர்கொண்ட நாள் வந்தது. 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொழிற்சாலைகளினதும் ஆலைகளினதும் புகைபோக்கிகளிலிருந்துபுகை கிளம்பவில்லை. டிட்ரோயிட்டில் பதினோராயிரம் தொழிலாளர்கள் எட்டு மணி நேர அணிவகுப்பொன்றை நடத்தினர்.

நியூயோர்க்கில் இருபத்தையாயிரம் தொழிலாளர்கள் தீப்பந்த ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். அதே வேளை நாற்பதாயிரம் பேர் அங்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சின்சின்னாட்டியில் நானூறு ஸ்பிரிங் பீல்ட் ரைபிள்கள் தாங்கிய வீரர்கள் தலைமையில் தொழிலாளர் படை ஊர்வலமாகச் சென்றது. கென்டக்கியில் ஆறாயிரத்துக்கு மேலான தொழிலாளர்கள் அதாவது கறுப்பர்களும் வெள்ளையர்களும் உட்பட தேசிய பூங்காவூடாக ஊர்வலமாகச் சென்றனர்.

தொழிலாளர் கிளர்ச்சியாளர்களின் கேந்திர மையமான சிக்காக்கோவில் குறைந்தது முப்பதாயிரம் தொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர். இப்படியான கூட்டு ஒற்றுமை நடவடிக்கைகளை உலகம் முன்னம் கண்டதில்லை.

இத்தினத்திற்கு அடுத்தடுத்த நாட்களில் தொழிலாளர்களின் இரத்தத்தால் பூமி சிவக்கத் தொடங்கியது. மே இரண்டாம் திகதி ''மிக்கொர்மிக் ரீப்பர் வேக்ஸ்'' தொழிற்சாலையில் தொழிலாளர்களை நோக்கி பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் இரண்டு தொழிலாளர்கள் துடிதுடித்து மாண்டனர்.

மே நான்காந் திகதி ஹேமார்க்கட்டில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய முயற்சிக்கையில் குண்டொன்று வெடித்தது. இதில் ஏழு பொலிசார் மாண்டனர்.

இச்சம்பவத்தை முதலாளித்துவ அரசு சாட்டாக வைத்து ஆயிரக்கணக்கான புரட்சிவாதிகளையும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களையும் சிறையிலிட்டது

பொலிஸ்காரர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் எட்டு தலைவர்கள் சிக்காக்கோ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீது நீதியான விசாரணை நடைபெறவில்லை.

நீதிபதி, ஒருவருக்கு ஆயுள் தண்டனையையும் மீதி ஏழு பேருக்கு மரணதண்டனையையும் வழங்கினார். தொழிலாளர்கள் பொங்கி எழுந்தார்கள். இந்த எழுச்சியைத் தடுப்பதற்காக இரு தலைவர்களது மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தார்கள்.

1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதினோராம் திகதி பாசன்ஸ், ஸ்பைஸ், ஏங்கல் பிஷர் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர் சில்லிங் என்ற தலைவர் ஏற்கனவே இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவர்கள் இறுதியாக நீதிமன்றத்தில் ஆற்றிய உரைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. தூக்கிலிடப்பட்ட ஸ்பைஸ் என்ற தலைவர் நீதிமன்றத்தில் நீதிபதியைப் பார்த்து ''ஒரு வர்க்கப் பிரதிநிதியாக நின்று கொண்டு வேறு வர்க்கப்பிரதி நிதிகளின் முன்னால் பேசுகின்றேன். உங்கள் குற்றச் சாட்டே என்னை நிரபராதி ஆக்குகின்றது. இன்று நீங்கள் அழித்தொழிக்க முயலும் இந்த ஓசைகளை விட நாளை ஏற்படப்போகும் மௌனம் சக்தி வாய்ந்தது. இனி வர இருக்கும் தொழிலாள எழுச்சியை எம்மைத் தூக்கிலிடுவதன் மூலம் தடுக்கலாம் என்று நீங்கள் நினைத்தால் உங்கள் முகத்துக்கு முன்னும் முகத்துக்குப் பின்னும் எங்கெங்கும் பரவியபடி புகை மூட்டிய தீச்சுவாலை கக்கும். அப்போது தரையின் அடியிலே அனலாய் கொதிக்கும் அந்தப் பூதாகார நெருப்பை உங்களால் அணைத்துவிட முடியாது. வெந்துபோய் விடுவீர்கள்'' என்றார்.

தூக்கிலிடப்பட்ட தலைவர்களின் சாவு தொழிலாளர்களை அச்சம் கொள்ளச் செய்யவில்லை விழித்தெழச் செய்தது.

1889 ஆம் ஆண்டு பிரடெரிக் எங்கெல்ஸ் தலைமையின் கீழான இரண்டாவது சர்வதேசியத்தின் ஸ்தாபக மகாநாட்டில் வைத்து தொழிலாளர்களின் தியாகம்நிறைந்த வர்க்கப் போராட்ட நினைவுகள் எழுச்சியைப் பெற்றுக்கொடுத்த 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி

— 5ஆம் பக்கம் பார்க்க

குறுநாவல் ..... (16)




ஆனந்தியையும் விஜேயையும் இழந்து வெறுங்கையுடன் மீண்டும் தனது முகாமிற்கு திரும்பிச் செல்லுதல் என்பதை சூர்யாவினால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தன்னைத் தனியாளாக நின்று எதை சாதிக்க முடியும் என்பதும் புரியவில்லை. அவனிடம் இப்போது இடுப்பு பட்டியில் பொருத்தப்பட்ட இரண்டு கிரனேட்டுகளும், பேனைக்கத்தியும் மட்டுமே இருந்தன. இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வது?

ஆங்கிலத் திரைப்படங்களில் 'ஸில்வர் ஸ்ரெலோன், லீவான் கிளிங்' போன்ற ஹீரோக்கள் தனிநபர்களாக சாகசம் செய்து இராணுவ முகாம்களை தகர்த்து வெற்றி பெறுவதை சூர்யா பலமுறை நிராகரித்திருக்கிறான். இத்தகைய தனிநபர் சாகசங்கள் நடைமுறைச் சாத்தியம் அற்றவை என்பதே அவனுடைய கணிப்பாக இருந்தது.

இப்போது? வேறுவழியில்லை எப்படியும் முகாமிற்குள் புக வேண்டும். புகுந்தே தீர்வது என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

நேரம் நிமிஷங்களாக நகர்ந்து கொண்டிருந்தது. தமது தேடுதல் நடவடிக்கைகள் எந்தவித பலனையுமளிக்காது என்பதை உணர்ந்த இராணுவத்தினரோ தேடுதல் நடவடிக்கையை கைவிட்டு, முகாமின் பாதுகாப்பை பலப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

சூர்யா தனது மறைவிடத்திலிருந்து மெல்ல மெல்ல வெளியே வந்தான்.

முன்னிரவு ஆரம்பமாகியிருந்தது. உதயசந்திரன் பிரகாசமாகப் பவனி வரத் தொடங்கிவிட்டிருந்தான். அல்லி மங்கைகளைத் தரிசிப்பதற்காக போலும்.

இராணுவ முகாம் நிலா வெளிச்சத்தில் துல்லியமாகத் தெரிந்தது. "டென்ற்"கள் மூலம் முகாமை அமைத்திருந்தார்கள் சுற்றிலும் முட்கம்பி வேலிகள் போடப்பட்டிருந்தன.

சுருளாக்கப்பட்ட முட்கம்பிகளே பயன்படுத்தப்பட்டிருந்தன அதில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கலாம். இராணுவ முகாமிற்கு பாதுகாவலாக உள்ளே கண்ணிவெடிகளையும முட்கம்பி வேலிகட்கு அப்பால் புதைத்திருக்கலாம்.

முகாமின் 'ஸென்றி'கள் பணி புரிவதற்காக கட்டப்பட்டிருக்கின்ற காவற் கூடுகளோ, அல்லது காவற்கோபுரங்களோ எதுவும் காணப்படவில்லை.

முகாமைச் சுற்றியுள்ள பகுதி வெளியாக இருப்பதால் நிலக்கீழ் 'பங்கர்' முறைமூலம் சென்றிகள் பணி புரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள் என நினைத்துக் கொண்டான் சூர்யா.

இராணுவ முகாமிலிருந்து இப்போது இராணுவத்தினர் வெளிவந்து காட்டுப் பகுதியை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். அவர்கள் பத்துப்பேர் இருப்பார்கள். 'காவற் கடமைக்கு போகிறார்கள் போலும்' என்று நினைத்தான் சூர்யா.

அவன் நினைத்தது மிகவும் சரியே. அந்த முகாமின் காவற் கடமைகளை இருவகையாகப் பிரித்திருந்தார்கள். ஒன்று முகாமிற்கு உள்ளேயான காவற்கடமைகள், மற்றையது முகாமிற்கு வெளியேயான காவற்கடமைகள்

முகாமிற்கு வெளியேயான காவற்கடமைகள் காட்டுப்பகுதியில் எதிரிகள் வரலாம் என்று கருதக்கூடிய முக்கியமான இடங்களில் அமைந்திருந்தன. முகாமிற்கு வெளியேயான காவற்கடமைகளிற்குத்தான் பத்து இராணுவத்தினரும் போகிறார்கள்.

சூர்யாவின் மூளைப்புலன் துரிதகதியில் வேலை செய்தது. இந்த பத்து இராணுவத்தினரும் சென்று கடமைகளைப் பொறுப்பேற்றதும், முன்னர் கடமையிலீடுபட்டிருந்த பத்து இராணுவத்தினரும் முகாமிற்கு திரும்புவார்கள். அவர்களும் இதே பாதையின் ஊடாகத்தான் வரவேண்டும்.

அவர்கள் திரும்புவதற்கு முன்னால் சடைத்திருக்கும் அந்தக் காட்டு நாவல் மரத்தின் பின்னால் சென்று மறைந்து கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு நிலவு தடையாக இருந்தது.

சனியன் இன்றைக்கு என்றுதான் பால்போல் எறித்தது. இப்போது அந்த மரத்தை நோக்கி ஊர்ந்தாலோ, வேறுவினையே வேண்டாம். அந்த நிலவு வெளிச்சத்தில் அந்த வெளியில் நிகழ்கின்ற எந்த ஒரு அசைவையும் முகாமினுள்ளே உள்ள 'ஸென்றி' கவனித்து விடுவான். அப்புறம் சொல்லவே தேவையில்லை.

சூர்யா பொறுமையுடன் காத்திருந்தான். மேலே வடக்கு வானத்தின் கோடியில் கருமேகத் திரளொன்று தெற்கு நோக்கி அசைந்து வந்து கொண்டிருந்தது.

அந்த கருமேகத் திரளானது அசைந்து வந்து நிலவை மறைக்கும்வரை காத்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையுடன் காத்திருந்தான்.

இன்றைக்கென்று காற்று மெதுவாகவே வெடித்தது. மேகத்திரளும் மெதுவாகவே அசைந்தது "...... மேகம், தரித்திரம் பிடிச்சது"

தூஷண வார்த்தைகளால் மேகத்தை வசைபாடினான் சூர்யா, வினாடிகள் நிமிஷங்களை சிருஷ்டித்தன.

இப்போது காற்று கொஞ்சம் வேகமாக அடித்தது போலிருந்தது.

(நாளை தொடரும்)

# அகதிகள் புனர்வாழ்வு கழகம் அரும் பணிகள் ஆற்றுகின்றது

இன்றைய காலகட்டத்தில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகப்பணிகள் மகத்தானவை. அமரர் கே. சி நித்தியானந்தாவின் தலைமையில் 1977 இல் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் அளப்பரியசேவைகளை ஆற்றிவந்துள்ளது.

மேற்கண்டவாறு அகதிகள் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர் திரு. ஆ. கனகசபாபதி கூறினார்.

சுழிபுரம் மெய்கண்டான் பாடசாலையில் வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டம் தலைவர் திரு. வி என் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

சங்கானை, அராலி, வடடுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர் ஆகிய இடங்களின் சனசமூக நிலைய பிரதிநிதிகள் கலந்துகொண்ட மேற்படி கூட்டத்தில் திரு. கனகசபாபதி தொடர்ந்து பேசும்போது;

திரு. நித்தியானந்தாவின் மறைவுக்குப்பின் அமரர் கா. விஸ்வலிங்கம் தலைமையேற்று நடத்திய காலத்தில் கழகத்தின் பணிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.

1983 இல் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த மக்களின் 395 குடும்பங்களை ஊற்று, முறிப்பு, குருகுலம், காந்தி கிராமம் ஆகிய இடங்களில் குடியேற்றினார் அவர்.

விவசாயம் செய்து வாழ்வதற்கு அவர்களுக்கு உபகரணங்கள் வழங்கியும், கிணறுகள் அமைத்துக் கொடுத்தும் கழகத்தின் மூலம் உதவிகள் பல செய்தார்.

பலவழிகளிலும் பாதிக்கப்பட்டோருக்கு அவரவருக்கு ஏற்ற வகையில் தொழில் புரிந்து வாழ வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன.

அங்கவீனர்களுக்கும் முடமாக்கப்பட்டவர்களுக்கும் கழகம் உதவிவருகிறது. உயர் கல்விபெறும் மாணவர்கள் பலருக்கும் புனர்வாழ்வுக் கழகம் உதவிகள் புரிந்து வருகிறது.

திரு. விஸ்வலிங்கத்தின் மறைவையடுத்து புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஏற்று கழகப் பணிகள் மேலும் விரிவடைய திட்டங்கள் தீட்டி உழைத்து வருகிறார்.

1983ஆம் ஆண்டு ஆவணி மாதத்தின் பின்னர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இற்றைவரை நூற்றித் தொண்ணூற்றைந்து லட்ச ரூபா தொகையைப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் செலவு செய்துள்ளது. வெளிநாட்டிலுள்ள கருணையுள்ளம் கொண்டோர் இதற்கு உதவியுள்ளார்கள். உள்நாட்டிலும் பாடசாலைகளிலும், கிராமங்களிலுமாக ஏழு லட்சம் ரூபா இப்பணிக்கு சேர்க்கப்பட்டது. இந்த நற்பணிகளை விரிவுபடுத்தி பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக நிதி ஈட்டும் முயற்சியில் நிகழ்ச்சிகளை நடத்திவருகிறோம். கலைவிழாக்களை பாடசாலைகளில் ஏற்பாடு செய்து கலைகளை வழர்ப்பதோடு நிதியும் சேகரித்து வருகிறது கழகம். இவ்வாறு இந்தப்பணிக்கு உதவுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன் என்றார்.

சமாசச் செயலர் திரு. ந. சிவரஞ்சன் பேசும்போது, அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஒப்பற்ற பணிகளை ஆற்றிவருவதால் அதன் பணி மேலும் சிறக்க அனைவரும் முன்வந்து உதவவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

## இரு இளைஞர்மீது அரசு வலைவீச்சு

கடந்த 21-ம்திகதி புறக்கோட்டையில் நடைபெற்ற கார் குண்டுவெடிப்பு தொடர்பாக இரு தமிழ்இளைஞர்கள் தேடப்படுவதாக நேற்று அரசாங்கம் அறிவித்துள்ளது. வவுனியாவைச் சேர்ந்தவரும் தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் பரிசோதகராகக் கடமையாற்றியவருமான சிதம்பரப்பிள்ளை வரதராஜா (35), கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் துரைரத்தினம் மனோகரன் (21) ஆகிய இரு இளைஞர்களே தேடப்பட்டு வருபவர்களாவர்.

## ராணுவம் மறுக்கிறது

காங்கேசன்துறையில் வைத்து ராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலியான யாழ் ஆஸ்பத்திரி டாக்டர் விஸ்வரஞ்சனை தாம் சுடவில்லை என ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ராணுவம் செய்ததற்கு யார் சாட்சி என்றும், போராளிகள் சுட்டிருக்கலாம் எனவும் ராணுவ உயர் அதிகாரி தெரிவிததுள்ளார்.

டாக்டரின் மரண சம்பவத்தைப் பத்திரிகை வாயிலாகவே தாம் அறிந்ததாகவும், அதற்காக கவலை தெரிவிப்பதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

ஹொரைசன் என்ரர்பிரைசஸ்
HORIZON ENTERPRISES

★ குவைத் ★ சவூதி
★ ஓமான் ★ டோகா

ஆகியவற்றுக்கான

பிரயாண ஒழுங்குகள்

கடந்தவாரம் எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொண்டோரைத் தொடர்ந்து இவ்வாரம் 25-4-87 சனிக்கிழமை அன்று பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரம் பின்வருமாறு:-

1. அந்தோனிப்பிள்ளை டொன் பொஸ்கோ, வாட் நம் 8, புதுக்குடியிருப்பு, முல்லைத்திவு.
2. கந்தையா முருகையா, வாட் நம் 2, சரவணை மேற்கு, வேலணை.
3. கிறிஸ்ரி அன்ரனிதாஸ், இல. 12/2, கெனடி லேன், நாவாந்துறை.
4. பரம்சோதி உதயகுமார், நாவலடி லேன், மயிலிட்டி.
5. நடேசராஜா நவரட்ணராஜா, இல 26, கனகரட்ணம் வீதி, அரியாலை.
6. சந்தியா பத்திநாதர் அன்ரன், பெரியவிளான், இளவாலை.
7. கதிரவேலு கிறிஷ்ணபிள்ளை, தாவளை இயற்றாலை, வரணி.
8. சற்குணம் அரசரட்ணம், பெரியவிளான், இளவாலை.
9. தம்பையா ரவிச்சந்திரன், திருமகள் ஸ்ரோரிஸ், கண்டி வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
10. யோசப் பெர்ணன்டோ, கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
11. கதிரவேலு கந்தசாமி, கைதடி மேற்கு, கைதடி.
12. இராமலிங்கம் பாலசுந்தரம், பூநரி, நல்லூர்.
13. செல்லையா விமலச்சந்திரன், பூநரி, நல்லூர்.
14. அன்ரனி கிறிஸ்ரி சேவியர், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு,
15. இளையதம்பி பிரேமச்சந்துரு இன்ஜினியர், ஈஸ்வரி வாசா, கட்டுக்காணி லேன், சாவகச்சேரி.
16, சிவலிங்கம் சுபாஸ்கரன், உரும்பராய் மேற்கு, உரும்பராய்.

சவூதி குவைத் ஓமான் டோகா ஆகியநாடுகளுக்கான வெற்றிடங்கள் அதிகளவில் இருப்பதால் உடன்16 புகைப்படம், பாஸ்போட்டுடனும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

நாம் மத்திய கிழக்கு நாடுகட்கான பிரயாண ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிறோம். உங்கள் கடவுச் சீட்டுக்களை குறித்ததவணையில் செய்துதரப்படும். எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்முடன் கடிதமூலம் தொடர்புகொள்வோர் முத்திரைக் கவருடன் தொடர்புகொள்ளவும்.

A. பத்மதாஸ்

மதுரா வீடியோ கிளப், இல. 96, 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல 23549

04125

# பொசுப் பொழுது

யாழ். இந்துக் கல்லூரிச் சந்தியிலுள்ள கடையொன்றில் சோடா குடித்துக்கொண்டு நின்றேன்.

அங்கு வந்த அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் ''வாழைப்பழம் என்ன விலை'' என்று கடை உரிமையாளரைக் கேட்டார்.

கிலோ ஐந்து ரூபா என்று பதிலளிக்கப்பட்டது.

மளமளவென்று ஒவ்வொரு பழமாக அந்த நபர் பிடுங்கினார். ''அப்படிப் பிடுங்க வேண்டாம், வெட்டித் தருகிறேன்'' என்று கடைக்காரர் சொல்ல, ''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு அவர் தம்பாட்டில் பிடுங்கித் தள்ளினார்.

ஒரு கிலோ பழம் வாங்கிக் கொண்டு அவர் போய் விட்டார்.

''மனுஷன் கெட்டிக்காரன் தான்'' என்று கடைக்காரர் முணு முணுத்தார்.

சீப்பாக வாழைப்பழத்தை வெட்டியிருந்தால் காம்பும், தண்டும் சேர்த்து நிறுக்கப்பட்டிருக்கும். தனித் தனியாகப் பிடுங்கியதால் நிறுவையில் இரண்டு பழம் கூடக் கிடைத்திருக்கும்.

சும்மா சொல்லக் கூடாது. பழைய மூளைதான்!

உக்கிரன்

# பாகிஸ்தானுக்கு ஏவார்க்ஸ் விமானங்களை அமெரிக்கா வழங்கும்

(நியூயோர்க்)

ரடார்கருவி, வேவுபார்க்கும் வசதி, ஏவார்க்ஸ் கருவி பொருத்தப்பட்ட யுத்ததேவைகளுக்கு பயன்படுத்தப்படும் விமானங்களை பாகிஸ்தானுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் முகமட் ஜுனேஜோ இது தொடர்பாக ஜனாதிபதி றீகனுக்கு சில தினங்களுக்கு முன்னர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இதனையடுத்து றீகன் நிர்வாகம் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேபோல பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரியும் இத்தகவலைசெய்தியாளரிடம் கூறினார்.

குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் இந்த விமானங்களுக்கு பாகிஸ்தான் பணம் செலுத்தத் தேவையில்லை.

ஆனால் பாகிஸ்தான் இவற்றை பணம் செலுத்தி சொந்தமாக்கவே முயற்சிக்கிறது.

இவை ஒரு குறிப்பிட்ட காலம் வரையுமே பாவனைக்கு உதவும் என்பதாலேயே தற்போதைக்கு குத்தகைக்கு வாங்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க ஏவார்க்ஸ் விமானங்களை அமெரிக்க விமானப்படையினர் பாகிஸ்தானில் இருந்து இயக்குவார்கள் என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை பாகிஸ்தான் நடாத்த விரும்பியுள்ளதாகவும், விரைவு எச்சரிக்கை வசதியுடைய விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்கும் திட்டத்தை கைவிட்டுள்ளதாகவும் நியூயோர்க் டைம்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கைலாச பிள்ளையார் உற்சவம்

(நல்லூர்)

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது பத்து நாட்கள் நடைபெறும் இத் திருவிழா 4 ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

## கொழும்பில் மே தின விழா 22-ம் திகதி

கொழும்பில் மே தினக் கொண்டாட்டங்களை இம்முறை மே 22 ஆம் திகதிக்கு முன்னர் கொண்டாடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்குவதில்லை என நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே 22 ஆம் திகதி தேசிய வீரர்கள் தினமாகவும் பொது விடுமுறை தினமாகவும் இருப்பதினால் அன்றைய தினம் மே தின ஊர்வலங்களையும், கூட்டங்களையும் கொண்டாடுவதெனவும் நேற்று முடிவெடுக்கப்பட்டது. எனினும் மே தினமான முதலாம் திகதி ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடாத்த தமக்கு அனுமதிவழங்கப்படவேண்டும் என ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜிக் கட்சி, நவலங்கா சமசமாஜிக் கட்சி என்பன அரசைக்கோரியுள்ளன.

## மேய்ப்பனின் குரல்-87

(நல்லூர்)

சுண்டுக்குளி கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினரால் நாளை 2 ஆம் திகதி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் 'மேய்ப்பனின்குரல் 87' எனும் பாடல்கள், நாடகங்களை உள்ளடக்கிய ஓர் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் சகோவோல்டன் ஜெயராஜா அவர்களின் தேவ செய்தி இடம் பெறும்.

## மரணமானார்

(வல்வெட்டித்துறை)

கடந்த வெள்ளிக்கிழமை வல்வை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐயாத்துரை சசிஹரன் (வயது17) நேற்று மரணமானார்.

## இன்றைய பலன்

**மேடம்:** வாக்குவசீகரம், பெரியோர் உதவி, தனதானிய லாபம், எண்ணிய எண்ணம் கை கூடல், தூரதேசம் போனவர் வீடு வந்து சேரல்.

**இடபம்:** பணப் புழக்கம், மாதா வழி நன்மை, கன்னியர் வாழ்வில் சுகம், மனையில் மங்கள காரியம் நிறைவேறல்.

**மிதுனம்:** விஸ்விரயம் நம்பியவர் ஏமாற்றுவார், இனிக் கப்பேசி இடைஞ்சல் கொடுப்பார்கள், இடமாற்றம் நன்மை தரும்.

**கடகம்:** எதிலும் இலாபம், வணிகர்களுக்கு வளமான நாள், தாராள பணப்புழக்கம், புத்திரர் ஒருவரால் புகழ் உண்டாம்.

**சிங்கம்:** தொழில் தடை நீங்கும், பூமியால் பலிதம், மனையில் சுபகாரியம், மாதுருவழியால் புகழ், மாங்கல்யத் தடை நீங்கும்.

**கன்னி:** பிதாவழி உதவி, தனவரவு, செய் தொழில் விருத்தி, பெண்களால் நன்மை, வெளியூர்ச் செய்தியால் மனமகிழ்ச்சி

**துலாம்:** வாக்குக் கலகம், குடும்பத்தில் விரக்தி, சிநேகிதர் பகை, உதவி செய்தவர் பகையாவர், பிதாவழிக்கவலை

**விருச்சிகம்:** வாகன விருத்தி, புதுத் தொழில் கை கூடுதல் உதவியால் புகழ், இனசன வருகை, விருந்துபசாரம்.

**தனுசு:** மாதா வழியால் மனக்கிலேசம், மாங்கல்ய காரியத்தடை, கைப்பொருள் நஷ்டம், பெரியோர்கள் உதவி.

**மகரம்:** வெளியூரில் உள்ளோர் வீடு வருதல், அரசால் நன்மை, சகலகாரியசித்தி, சகோதர வழிப்பாசம்

**கும்பம்:** மாதா வழியால் ரோக பீடை, மனக் கவலை, உடல் நலக் குறைவு, உடன் பிறந்தோரால் உதவி, வட திசைப் பொருள் வரவு

**மீனம்:** எல்லா விஷயங்களிலும் கவனம் அவசியம் அற்ப லாபம், யோசனை மிகுதி நண்பர்களால் தொல்லை

யாழ். சோதிடர் ·. அரியநாயகம்

## அடக்குமுறை....

— 3ஆம் பக்கத் தொடர்ச்சி

யாகிய அத் தினம் 'மே' தினம் எனப் பெயர் சூட்டப்பட்டதுடன் பாட்டாளிகளின் உலகம் தழுவிய நடவடிக்கைக்கான தினம் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இன்று இம் மே தினத்திற்கு நூற்றொரு வயதாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்

இன்றைய சூழ்நிலையில் பாதுகாப்பான இடத்தில் எமது சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

**ELECTRONIC SERVICE CENTRE**

வானொலி, ரீ. வீ, டெக், டிரான்ஸ்போமர் வேறு மின்சார உபகரணங்கள் குறைந்த தவணையில் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

வானொலி, ரீ. வீ உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

**எலெக்ரோனிக் சேவிஸ் சென்ரர்**

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05006

## சித்திரச் சிறுவிளம்பரம்

**கல்வி**

புதிய வகுப்புகள் க.பொ.த (உயர்)89 கலை/வர்த்தகம், விஞ்ஞானம். ஆண்டு 4.5.6,7, 8,9,11. ஆரம்பம்: 9/5/1987 பி.ப 3.மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.

04122

## அனூஸ்

**கிறீம்ஹவுஸ் அன் கூல்பார்**

**தரமான சுவையான**

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ ஐஸ் பழம்
★ குளிர்பானங்கள்
★ ஐஸ் சொக்
★ கேக் வகைகள்
★ ஐஸ் ஜொலி
★ ஸ்பெஷல் சொக்கலேட் கிறிப்ஸ்
★ ஸ்ரோபறி கிறீம்
★ சிற்றுண்டி வகைகள்
★ பீடா

மற்றும் விழாக்கள், களியாட்டங்கள் அனைத்திற்கும் தேவையானவற்றை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!

**அனூஸ் கிறீம் ஹவுஸ் அன் கூல் பார்**

இராமநாதன் வீதி, பல்கலைக்கழக சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

05007

என்றும் உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி

சுத்தம் சுவைமிகு சைவ உணவுக்கும் தித்திக்கும் தீஞ்சுவைமிகு சிற்றுண்டி வகைகளுக்கும்

## நியூ குகானந்தன் கபே

உங்கள் மகிழ்ச்சிகரமான மங்கள வைபவங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக் கொடுக்கப்படும்

485, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05001

01-05-1987 வெள்ளிக்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

★ அமெரிக்க அதிகாரி அறிவிப்பு:

# இலங்கை அரசு ராணுவத் தீர்வை முயற்சிக்க கூடாது

திருகோணமலை பஸ் மீதான தாக்குதல், கொழும்பு குண்டு வெடிப்புசம்பவம்என்பவற்றை வைத்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முற்றிலும் ராணுவத் தீர்வில் தங்கியிருக்கவேண்டாம் என்று அமெரிக்க அரசியல் விவகார உதவி ராஜாங்க அமைச்சர் மைக்கல் ஆமட்கோஸ் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற ஆசியசங்கக் கூட்டம்ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் வன்முறைகள் ஒழிந்த பின்பு இலங்கைக்கு அமெரிக்கா பல உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

## கோட்டை ஷெல் அடியால் நகரின் ஒருபகுதி இருட்டில்

கோட்டை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் யாழ்நகரின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார் இன்றைய நிலையில் இப்பகுதிக்கான மின் விநியோகத்தை மீள வழங்க முடியாமலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் மின்சாரம் தடைப்பட்ட பகுதிகளில் அது திருத்தப்பட்டு நேற்றே மீள வழங்கப்பட்டது.

முதலாம் குறுக்குத் தெருவுக்கும், இரண்டாம் குறுக்குத் தெருவுக்கும் இடையே உள்ள பிரதான மின் விநியோக கம்பிகள் சேதமடைந்துள்ள பகுதியில் திருத்த வேலைகளைச் செய்யும் போது கோட்டை முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படலாம் என அஞ்சுவதால் ஊழியர்கள் அதனைத் திருத்துவதற்கு அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

## ஈழவர் முன்னணி ஊர்வலம்

ஈழவர் முன்னணியின் மேதின ஊர்வலம் இன்று காலை இணுவிலில் ஆரம்பமாகும். இவ்வூர்வலத்தில் மாணவர் இளைஞர் பொதுமன்றமும் பங்குபற்றும்.

### விமானத்தாக்கு...

சினையைத் தீர்க்க முயலும் போது தீவிரவாதிகள் அதனை உதாசீனம் செய்துவிட்டு இராணுவ நடவடிக்கைகளிலேயே நம்பிக்கை கொண்டு இராணுவத்தினரின்மீது தாக்குதல்களைத் தொடர்ந்து வருகின்றனர். கடந்த வாரம் மட்டும் வடபகுதியில் முப்பத்தைந்து படைவீரர்கள் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது தீவிரவாதிகள் அப்பாவிச் சிங்களமக்களை கொலை செய்வதில் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். இந்நிலையில் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணப் பகுதியை மீட்க விமானத்தாக்குதல்களை விரைவில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது எனவும் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

இலங்கையில் படையினருக்கு இஸ்ரேலியரும், பிரிட்டிஷ் கூலிப்படையினரும் உதவி வருவதை ஒத்துக்கொண்ட அமைச்சர் இலங்கைப் படையினருக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கி வருவதோடு தேவைப்படும் போதெல்லாம் இராணுவத்தினருக்கு ஆலோசனைகளையும், பயிற்சியையும் வழங்கி ஒத்துழைப்பதாகவும் தெரிவித்தார்.

### ஆஸ்பத்திரி...

தியசாலையின் பத்தாம் வார்ட் நேற்று முன்தினம் இரவு சிறிது சேதமடைந்தது.

ஆஸ்பத்திரிக்கு அருகில் வெடித்த 'ஷெல்' ஒன்றின் பாகங்கள் பத்தாம் வார்ட் ஓடுகளையும் உடைத்துக் கொண்டு உள்ளே விழுந்து சேதத்தை ஏற்படுத்தியது.

### பேச்சுக்கு...

ளனர். இதனால் வடக்கில் இராணுவத்தாக்குதல்களை மேலும் தொடர்ந்து தென்பகுதியில் அப்பாவி மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் இரத்தக்களரியைத் தடுக்க உலக நாடுகள் ஆக்கபூர்வமான முறையில் உதவவேண்டும்' எனவும் திரு. டிரோன் பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

### ஒரு குடும்பத்தை...

இடத்திலுள்ள சி. தம்பிராசா (33) என்பவரது வீட்டில்வந்து விழுந்து வெடித்ததாலேயே இவ் அனர்த்தங்கள் ஏற்பட்டன.

'ஷெல்' விழுந்து வெடித்துச் சிதறியபோது தம்பிராசாவின் முதல் மகளான தர்ஷிகா ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

### 3 மேதின...

ஊர்வலம் காலை ஒன்பதரை மணியளவில் நல்லூர் இந்து விடுதி முன்பாகவிருந்து ஆரம்பமாகும். பொதுக் கூட்டம் கொக்குவில் சந்தியில் இடம் பெறும்.

★ ஜனதாக் கட்சி மத்திய அரசிடம் கோரிக்கை:

# ஈழத்தமிழர் படுகொலையை உலகறியச் செய்யவேண்டும்

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து உலக நாடுகளின் கருத்தை திரட்டுமாறு ஜனதா கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற இக்கட்சியின் தேசிய நிர்வாகக்குழுக் கூட்டம் இலங்கைத் தமிழர்களின் படுகொலைகள் பற்றி கண்டித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு பிரதமர் ராஜீவ் காந்தி செயற்படும் விதத்தையும் குறைகூறியுள்ளது.

தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை எதிர்க்க அணிசேரா நாடுகளிலுள்ள மக்களின் கருத்தை திரட்டுமாறும் இக்கட்சி பிரதமர் ராஜீவ் காந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### சுதந்திர தமிழீழ...

தலை எழுச்சியை, எமது உரம் மிக்க உறுதிப்பாட்டை உலகுக்கு வெளிக்காட்ட உள்ளோம்.

இன்று உலகில் மிகவும்அநாகரிகமான, மிருகத்தனமான, அடக்குமுறைக்கு ஆளாகி உள்ள மக்கள் சமூகம் என்றால் அது தமிழீழ மக்கள்தான். உலகில் எங்குமே நடைபெறாத கொடுமைகள் தமிழீழ மண்ணில் நாளாந்தம் நடைபெறுகின்றன. எமது எதிரியோ ஈவிரக்கம்இல்லாதவன். மனித உயிருக்கு மதிப்பளிக்காதவன். மனித தர்மங்களைப் பேணாதவன். மிகவும் பயங்கரமான இனவெறி கொண்டவன். இனரீதியாக எம்மை ஒழித்துக் கட்டுவதைவிட அவனுக்கு வேறு இலட்சியம் எதுவும் இல்லை. எம்மை இந்நாட்டுப்பிரஜைகளாகவோ அல்லது சாதாரண மனிதப்பிறவிகளாகவோ சிங்கள அரசு கருதவில்லை; எம்மை ஏதோ அந்நியர்களாக அடிமைகளாக வாழத் தகுதியற்ற பிராணிகளாகவே இந்த அரசு கருதுகிறது. எம் மீது சட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் காட்டு மிராண்டித்தனமான அடக்குமுறை இதைத்தான் தெட்டத்தெளிவாகக் காட்டுகிறது.

பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, எண்ணெய்த் தடை, தொலைபேசித்தடை இப்படியாக அத்தியாவசியமான எல்லாவற்றிற்கும் தடைகளை விதித்து எமது சமூக பொருளாதார வாழ்வை எமது நாளாந்த ஜீவாதார வாழ்வை சிதைக்க முயல்கின்றது இந்த அரசு. அத்துடன் மட்டுமே நின்றுவிடாது, ஆயுதப் படைகளை ஏவிவிட்டு அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் ஓர் அதர்மமான யுத்தத்தையும் எம்மீது தொடுத்திருக்கின்றது. இந்த யுத்தமானது, அப்பாவித் தமிழர்மீது தொடுக்கப்பட்ட யுத்தம். நிராயுதபாணிகளாக நிற்கும் மக்களைச் சுட்டுக் கொல்வதும் வெட்டிக் கொல்வதும் போன்ற இராணுவ வெறியாட்டங்கள் ஒருபுறமிருக்க விமானக் குண்டுவீச்சு, பீரங்கிக்குண்டு வீச்சுமூலம் தமிழீழத்தை ரணகளமாக்கி வருகின்றது சிங்கள அரச பயங்கரவாத ஓநாய்.

தமிழீழ மக்கள் மீது இனப் படுகொலையை நடத்திக் கொண்டு சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு என்ற போலி நாடகங்களையும் மேடை ஏற்றி வருகின்றது சிங்கள அரசு. இந்தியாவையும்; உலகத்தையும் ஏமாற்றுவதற்கான கபட நாடகமிது. கடந்த நான்கு ஆண்டுகளாக இழுபட்டு வரும் இந்த இராஜதந்திர செப்படி வித்தையையும், ஜெயவர்த்தனாவின் சூத்திரதார அரசியலையும், இந்திய அரசு இன்னமும் புரிந்து கொள்ளாதது எமக்குக் கவலையையும், வேதனையையும் தருகின்றது. சமாதானப் பேச்சு என்ற பொறிக்கிடங்கில் புலிகளையும் அடக்கி எம்மை நிராயுதபாணிகளாக்கி நிர்மூலம் செய்வதே ஜெயவர்த்தனாவின் சதித்திட்டம். நாம் தெட்டத் தெளிவாக எமது மக்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால் நாம் ஒருபோதும் ஜெயவர்த்தனாவின் சதி வலைக்குள் விழுந்து விடப் போவதில்லை என்பதுதான்.

சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தில் எமக்குத் துளி கூட நம்பிக்கையில்லை. இந்தப் பாசிச இனவாதக் கும்பலுக்கு தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித ஆர்வமும், அக்கறையும் இல்லை. தமிழரை ஒழித்துக்கட்டி தமிழ்த் தாய்ப் பூமியை கபளீகரம் செய்வதுதான் சிங்கள ஆளும் வர்க்கத்தின் நோக்கம். ஆகவே எனது அன்பார்ந்த மக்களே! சமாதானப் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு என்று எழுப்பப்படும் சுலோகங்களில் எவ்வித நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வைத்திருக்காதீர்கள். இந்த வார்த்தை ஜாலங்களில் எவ்வித அர்த்தங்களும் இல்லை. இவை இராஜதந்திர நாடகத்திற்காக ஓர் அரசு இன்னோர் அரசை ஏமாற்றுவதற்காக உலகத்தின் கண்துடைப்பிற்காக சிங்கள அரச பயங்கரவாதிகள் கையாளும் பிரச்சாரச் சொற் சாதனங்கள் அன்றி வேறொன்றும் அல்ல.

நாம் நாளாந்தம் எதிர்கொள்ளும் யதார்த்தம் வேறு. நாம் எதிர்கொள்வது சாவையும், கண்ணீரையும், இரத்தத்தையுமே. நாம் எதிர்கொள்வது ஷெல்களையும், குண்டுகளையும், துப்பாக்கி ரவைகளையுமே. இவையே நாம் தினம் எதிர்கொள்ளும் பயங்கரமான யதார்த்தம். எனவே ராஜதந்திரம் மூலமோ, போலித்தனமான பேச்சுவார்த்தைகள் மூலமோ ஜெயவர்த்தனாவின் மாவட்டங்கள் மூலமோ எமது பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை.

நாம் போராடி நாம் இரத்தம் சிந்தி நாம் எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும், அல்லது போராடிச் சுதந்திரமாக வாழவேண்டும். இதுதான் எமது அரசியல். தலைவிதி. இந்தத் தொழிலாளர் புனிதத் தினத்தில் நாம் ஒரு பிரதிக்ஞை செய்து கொள்வோம். அதாவது, சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இறுதியான தீர்வு. இந்தத் தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப்போராடுவோம். இது எமது மேதினப் பிரகடனமாக அமையட்டும்.

நாம் உருவாக்க இருக்கும் தமிழீழம் பாட்டாளி வர்க்கத்திற்கு சுபீட்சமளிக்கும் சமதர்ம சமுதாயமாக அமையும். நாம் தேசிய விடுதலைக்காக மட்டும் போராடவில்லை. தொழிலாள விவசாய வர்க்கங்களுக்கு பொருளாதார விடுதலையை அளிக்கும் சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் இலட்சியத்திற்காகவே நாம்போராடுகின்றோம். நாம் ஒடுக்கப்படும் மக்களாக சுரண்டப்படும் வர்க்கங்களாக போராடுகின்றோம். இந்தப் புரட்சிகர சக்திகளின் பிரதிநிதிகளாகவே நாம் எமது போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். ஆகவே, எமது புரட்சிகரப் போராட்டமானது, உலக பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஒரு இணைபிரியாத அங்கமாக அமைகின்றது. இன்று எமது புரட்சிப் போராட்டம், முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பிரசித்தி பெற்றுள்ளது.

எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்திப்படுத்தியுள்ளது.

தமிழ் நாடு அரசும் தமிழ் நாட்டு மக்களும் இன்று பகிரங்கமாக எமது விடுதலைஇயக்கத்திற்கு, விடுதலை இலட்சியத்திற்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது எமது போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம் என்றே நான்சொல்வேன். இதேபோல் இந்திய மத்திய அரசும், எமது மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

நீதியையும், தர்மத்தையும் சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றி அடைந்தே தீரும்.

## பிரயாண ஒழுங்கு

★ நோர்வே ★ கனடா ★ லண்டன்

● சவுதி அரேபியா
கிளினேஸ்,
மேசன்,
காப்பென்ரர்,
HV. சாரதிகள்,
பணிப் பெண்கள்.
A.C. மெக்கானிக்,
A.C. ஒப்பிறேறர்,
டீசல் மெக்கானிக்,
பிளம்பர்,
வெல்டர்,
லேபரர்.

● குவைத்:-
கிளினேஸ்,
பணிப் பெண்கள்,
HV. சாரதிகள்,
HQ. சாரதிகள்
பிளம்பர்,
காப்பென்ரேஸ்.

● சிங்கப்பூர்
லேபரர்,
பணிப் பெண்கள்.

இப்பிரயாணத்தை மேற்கொள்ள விரும்புவோர் உடன் வந்து எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்:- மிகக்குறைந்த கட்டணத்தில் பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற் என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:-
ROSAAN
Kopay Junction
Kopay

05010

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஆ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 01-05-87இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது